*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Estabished: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 142 JAFFNA, FRIDAY, 6th AUGUST, 1982 No. 32

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

## Jaffna College

The Second Term of Jaffna College concluded on Friday 6-8-82 having registered many notable events in the life of the School. The Prize Giving of the College was held on the 15th of May and the Sports Meets of the Senior and Junior Schools on the 22nd of June and the 9th of July respectively.

The Chief Guest at the Prize function was *Dr. (Mrs.) Maheswary Arulchelvam*, an Old Girl of Jaffna College (who had been on the Staff of the Undergraduate Department from 1957—1958) and is now Senior Lecturer in Sanskrit at the Peradeniya University. The Prizes were given away by *Dr. (Mrs.) Joy Canagarajah*, herself a product of Jaffna College, whose mother Mrs. D. R. Gunasegaram (daughter of Mr. J. V. Chelliah) was the first girl student to be admitted to the Lond Intermediate class.

In this context, the Principal in his Report mentioned that the first woman administrator in the school was *Miss Mary Elias* who is head of the Junior School of Jaffna College. She has been invited this year to two international assignments, one in Singapore with the Girl Guides Association and the other in USA on "Women and World Projects" of the United Church of Christ (Miss Elias has completed her first assignment and has now left for the US. She will be away for ten months).

**The Board of Directors**

*Mr. T. W. Rajaratnam*, former Judge of the Supreme Court has been elected a Member of the Board. His father, Mr. T. C. Rajaratnam was for many years the Chairman of the Board of Directors. The Office-Bearers of the present Board are:— *The Rt. Rev. Kulandran* (Chairman), *Mr. S. S. Selvadurai* (Secretary), *Mr. I. P. Thurairatnam* (Manager) and *Mr. J. M. Sabaratnam* (Vice President and Authorised Representative).

**Jaffna College Publications**

*Two* important Publications of Jaffna College have been released recently:— The Centenary Publication of the Miscellany and the Centenary Souvenir of the Alumni Association.

They cannot be, by any means, two different or independent publications. "There are many paths to a mountain" says a Chinese proverb "but the view is always the same".

Whether one reads the Centenary Publication of the Miscellany or the Centenary Souvenir of the Alumni Association, the "view" of that mountain of an Educational Instituition in the North — Jaffna College — is always the same.

It is the 'view' of an Institution which despite the challenging context in which it is set, has never lost faith in its ultimate destiny but presses on goaded by those inspiring words of Paul Tillich "Feed your faith and your doubts will starve to death".

[Excerpts of the Address of Dr. (Mrs.) M. Arulchelvam will appear in a subsequent issue.]

---

*Obituary*

**Rev. J. T. N. Handy**

We regret to record the death which took place on 12-7-82 of Rev. J. T. N. Handy MBE, former Deputy Director, Social Services, Singapore and later Secretary of the Diocese of Colombo, Church of Ceylon.

Rev. Handy belongs to a family, rich with the names of Ministers of the Church and Educationists who made a distinct contribution in their fields to national life in this country.

Rev. J. T. N. Handy's rehabilitation work in war-ravaged Singapore won for him the award of the MBE in 1949. His greatest achievement in Singapore was the building of the new Church of St. Hilda's on the foundation of the old school building — the Church which he re-visited in 1959 when he was invited as the Chief Guest for the Silver Jubilee Celebrations of the Church and School.

His period as Secretary of the Diocese of Colombo was marked by unparalleled zeal and energy. After his retirement in 1957, he came to Jaffna and was Rural Dean and also Property Secretary of the Diocese in the North, consequent on the Government 'Take-over' of schools. For two years he was also Incumbent of Christ Church, Jaffna, acting for the Archdeacon.

Rev. Handy's Funeral took place at the house of his daughter, Rangi Senanayake. A Requiem Mass was held at the Cathedral Church of Christ, the Living Saviour, conducted by the Bishop of Colombo, assisted by Bishop Cyril Abeynaike and Archdeacon Gnanapiragasam.

His ashes were interred at the family burial grounds in Jaffna after a Service at St. James Church Nallur conducted by Archdeacon Horshington assisted by Rev. A. J. C. Selvaratnam. Rev. J. T. N. Handy's wife predeceased him in 1972.

---

*Church News from Abroad*

**Ordination of Women:-** An Eastern Orthodox Bishop from India said during the 1982 Meeting of the Faith and Order Commission of the WCC held recently that there is "no theological basis" to object to the ordination of women. But he added that the practice should not be forced on any church. He did not think it appropriate to his own - the Syrian Church of the East of Niranam.

Russian Eastern Orthodox Metropolitan, Vitaly Borovoy called Orthodox opposition a question of "conscience, not of discrimination or ignorance."

American Anglican, Robert Wright was of opinion that any services work for Church Union must face the Ordination Question "squarely and in depth".

---

## IN MEMORIAM

IN TREASURED MEMORY
OF

**Mrs. Irene Nesamalar Devendra**
**(Nee Arnold)**

Died 22nd August 1978.

*"Asleep in Gods beautiful Garden*
*Away from all Sorrow and Pain*
*Someday when lifes journey ends*
*We shall meet together again."*

Lovingly remembered by your father, children, brothers, sisters and in-laws here and abroad.

---

## J. D. C. S. I. Childrens' Rally on 17th July 1982 at Atchuvely

**Prize Winners**

*(Continued from last issue)*

*Sermon on the mount — Declamation*

G. Paramalingam — Pandaterrippu
S. Gnanaratnam — Pandaterrippu
V. Gopal — Pandaterrippu
A. Sathiarajah — Karainagar
J. Kiruba — Chankanai
T. Sasikala — Pandaterrippu
Nilani — Harriet Winslow Home
Vijekumari — Harriet Winslow Home
Dayalini — Harriet Winslow Home
G. Selvaratnam — Uduvil
S. Bawani — Padaterrippu

*Consolation Prizes*

J. Innasi — Pandaterrippu
Jeeva Thambiappah — Uduvil

*Memorising of three chapters from the Bible*

K. S. Raju — Pandaterrippu

*Art Contest*

UNDER 11

C. Srivathan — Pandaterrippu
Quintus — Pandaterrippu
A. Manoraj — Pandaterrippu
S. Thambirajah — Vaddukoddai
A. Sasikala — Pandaterrippu

UNDER 13

C. Thankarajah — Pandaterrippu
Shiranthi — Pandaterrippu
V. Suganthini — Nunavil
C. Jeyarajah — Pandaterrippu
T. Sugunarajah — Tellippalai

*Essay Competion*

UNDER 13

T. Sugunarajah — Tellipalai

T. Ratnaleela — Nunavil
J. Jeyaratnam — Uduvil
J. Thambiappah — Uduvil
P. Jeyanayagam — Pandaterrippu

UNDER 16

Thangaraja — Pandaterrippu
P. Benjamin — Vaddukoddai
D. Raju — Vaddukoddai
Nalani Thambiappah — Uduvil
S. Selvini — Pandaterrippu

---

## A Service of Thanksgiving

for the life and work of

**Rev. J. T. N. Handy MBE**

will be held at

St. James Church, Nallur

on Saturday, 28th August, 1982 at 9-00 a. m.

All friends and relations are invited to this Service.

---

## A Service of Thanksgiving

for the life of the late

**Mrs. R. E. J. A. Setukavalar**

will be held at

St. John's Church, Chundikuli

on Friday, 27 August, 1982 at 4-30 p. m.

All Friends and relations are cordially invited to this Service.

136, Kachcheri-Nallur Road, Jaffna.

---

## St. John's College & Chundikuli Girls' College,

JAFFNA.

**Admission — 1983**

1. Vacancies ONLY in the following Grades: One, Four, Six & Nine.
2. Children born between 1-2-'77 and 31-1-'78 only will be considered for admission to Grade - One (Birth Certificate should be annexed along with the application).
3. Pupils to be considered for admission to Grades Four, Six, and Nine should be below the age of ten, twelve and fifteen respectively as on 31-1-1983.
4. Apply before 10th September on forms available from the respective Schools from the 1st of September 1982.
5. Please send stamped addressed long envelope and Postal Order for Rs. 15/- per form.
6. Admission Test (for Grade 4, 6 & 9 only) at 8-30 on Saturday 9th Oct., 82.
7. Time-table for the admission test will be issued with the application form.
8. Scholarships available for pupils who do exceptionally well at the admission test.
9. Applicants will be informed of the results - no personal calls please.

*Principal*

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 142 ] 6 — 8 — 1982 [ இதழ் 32


## ஆசிரியர் குறிப்பு

அவசரகால நிலைமையை முன்னிட்டு ஆசிரியர் கருத்து வெளியிடப் படவில்லை.

## சிந்தனைக்கான செய்திகள்

**ஆயிரத்துக் கெத்தனை?**

உலகம் 1000 பேரைக் கொண்ட ஒரு கிராமமாயிருந்தால்,

வட அமெரிக்கர் 60
தென் அமெரிக்கர் 80
ஐரோப்பியர் 210
ஆசியமக்கள் 564
பேராயிருப்பர்.
வெள்ளையர்கள் 300 பேரும்
நிறமுடையோர் 700
பேருமாயிருப்பர்
கிறிஸ்தவர்கள் 300
பேராயிருப்பர்

உலகின் முழு வருமானத்திலும் அரைப் பங்கு

60 பேருக்கு உரியதாயிருக்கும்
500 பேர் போதிய சாப்பாடு
பெறுதிருப்பர்
600 பேர் சேரிப்புற வாசிகளா
யிருப்பர்
700 பேருக்கு எழுத வாசிக்கத்
தெரியாமலிருக்கும்.

இப்பேர்ப்பட்டது நமது கிராமமாயிருந்தால் இந்த நிலையைச் சீராக்க நாம் முயல வேண்டும். பார்க்கப் போனால், இது நமது கிராமந்தான்; ஏனெனில் இது நமது உலகமே!

[ஆசியக் கிறிஸ்தவ சங்கத்தின் செய்தித் தாள்]

* * *

## வேதாகம விநியோகம்

1981 ஆம் ஆண்டில் உலகம் பரவலாக 104 லட்சம் வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டன. இவற்றுள் 37 லட்சத்து 31 ஆயிரத்து 223 வேதாகமப் பிரதிகள் ஒன்றிணைந்த வேதாகமச் சங்கங்களின் அமெரிக்கக் கிளைகளினாலும், 262731 பிரதிகள் அவுஸ்திரேலிய வேதாகமச் சங்கங்களினாலும் விநியோகிக்கப்பட்டவை. இது முந்திய வருடங்களிலும் பார்க்கக் கூடிய வேதாகம விநியோக வளர்ச்சியைக் காட்டுகின்றது என ஆசிய கிறிஸ்த சங்கத்தின் செய்தி வெளியீடு ஒன்று காண்பிக்கிறது.

* * *

## நூறு சிற்றாலயத் திட்டம்

இந்தியத் தமிழ் (சுவிசேட) லூதரன் சபை தமிழ் நாட்டின் கிராமங்களில் நூறு சிற்றாலயங்களைக் கட்டி எழுப்பும் ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஜெர்மன் லூதரன் மிஷன் நிறுவனம் ஒன்றின் உதவியோடு இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே கட்டப்பட்டுச் சென்ற மாதம் பிரதிட்டை செய்யப்பட்ட ஒரு சிற்றாலயத்தில் அநேகம் அற்புத சொஸ்தங்கள் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## அவுஸ்திரேலியா — ஆலயவழிபாடு

அவுஸ்திரேலியாவில் ஆலய வழிபாட்டிற்குச் செல்வோர் தொகை சென்ற ஆண்டில் சுமார் 27 சதவீதமாயிருந்தது. இந்த ஆண்டின் முற்பகுதியில் இது 31 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1972 ஆம் ஆண்டிற்குப் பின் இந்த ஆண்டிலேயே மிகக் கூடிய வீதமானோர் ஆலய வழிபாட்டிற் சேர்ந்துள்ளனர். இந்தக் குறிப்புகள் அவுஸ்திரேலிய வேதாகமச் சங்கத்தினால் கொடுக்கப்பட்டவை.

* * *

## என்னத்தை விசுவாசிக்கிறார்கள்

சமய சம்பந்தமாகப் பல அபிப்பிராய ஆய்வுகள் சமீபத்தில் நடத்தப்பட்டுள்ளன. இவை சிந்தனைக்குரிய பல விடயங்களைக் காண்பிக்கின்றன.

* சனத்தொகை வாரியாக வேறு பல நாடுகளையும் விட அமெரிக்காவிலேயே கூடிய விகிதமானோர் கடவுளை விசுவாசிக்கிறார்கள்.

* அமெரிக்கரில் 79 வீதமானோர் மரணத்தின் பின்னான வாழ்வையும், 61 வீதமானோர் நரகத்தைப் பற்றியும் நம்புகிறார்கள்.

* யப்பானியரில் மூன்றில் ஒரு பங்கினரே ஏதாகிலும் ஒரு சமயப்பற்றுக் கொண்டிருக்கிறார்கள்; எனினும் 21 வீதமானோரே கடவுள் என ஒருவர் இருக்கிறார் என நம்புகிறார்கள்.

* உலகம் முழுவதிலும் "வெள்ளைக் காரக் கிறுஸ்தவர்களிலும்" பார்க்க கூடிய தொகையினோர் தற்பொழுது வெள்ளைக்காரர் அல்லாத கிறிஸ்தவர்.

* இக்காலத்தில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் கூடிய கரிசனை காட்டி வருபவர்கள் வளர்முக நாடுகளிலிருக்கும் கிறிஸ்தவர்களே.

## செய்திகள்

### வாலிபர் ஒன்றுகூடல்

கண்டி மெதடிஸ்த திருச்சபை முகாமைக் குரு வண. ஹரல்ட் A. பெர்னாண்டோ அவர்களால் கடந்த ஜூலை மாதம் 24-ம் திகதி சனியன்று வாலிபர்களை ஒன்று கூட்டும் பொருட்டு முழுநாள் நிகழ்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்தின் சொற்பொழிவாளர்களாக புறக்கோட்டை மெதடிஸ்த ஆலய போதகரும், மெதடிஸ்த சபை மத்திய சபா சங்க வாலிபர் சங்கக் காரியதரிசியுமான வண. எபனேசர் ஜோசப் அவர்களும், கண்டி திருத்துவ கல்லூரியைச் சேர்ந்த வண. குமாரகுலசிங்க அவர்களும், கலந்துகொண்டனர். கண்டி வட்டாரத்தைச் சேர்ந்த பல்வேறு சபைகளைச் சேர்ந்த வாலிபர்களும், கொழும்பில் உள்ள ஒரு சில ஆலயங்களைச் சேர்ந்த வாலிபர்களும், இலங்கை இறையியல் கல்லூரி பிலிமத்தலாவையைச் சேர்ந்த மாணவர்களுமாக ஏறக்குறைய நூற்றிற்கும் மேற்பட்ட வாலிபர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வண. குமார இலங்கசிங்க அவர்கள் எமது கலாச்சாரத்திற் கேற்ப திருச்சபை எவ்வாறு இலங்கலாம் என்பதைப் பற்றியும், வண. எபனேசர் ஜோசப் அவர்கள் சமுதாயத்தில் கிறிஸ்தவ வாலிபர்களைப் பற்றியும், மிக தெளிவான முறையில் சுவைபட எடுத்துரைத்தனர். மேலும் வாலிபர்களை குழுக்களாகப் பிரித்து குழுமுறை ஆராய்வாக கலாச்சாரத்திற்கேற்ப எமது கிறிஸ்தவ திருச்சபையில் மாற்றங்கள் கொண்டு வருவதையிட்டும், அதனால் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியும் மேற்கொள்ளப்பட்டது. ஆராய்ந்த முடிவுகள் மாலையில் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அடுத்து மதிய போசனத்தைத் தொடர்ந்து பாடல்களும், விளையாட்டுக்களும் கண்டி Y. M. C. A. பொதுச்செயலாளர் திரு ஹரிஸ் மாணிக்கம் அவர்களால் நடாத்தப்பட்டது. இறுதியாக வந்திருந்த அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணமாக பல்வேறு இடங்களிலும் இருந்து கலந்துகொண்ட வாலிபர்களினாலும், கண்டி மகாபிறே, திருத்துவ கல்லூரிகளின் மாணவர்களினாலும், பல்வேறுவிதமான கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. தொடர்ந்து இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு தொடக்கம் உயிர்த்தெழுதல் வரையிலான நிகழ்ச்சிகள் படக் காட்சி மூலம் காண்பிக்கப்பட்டதோடு இப்பயன்தரு நிகழ்ச்சி நிறைவேறியது.

தொகுப்பு:
— இராணி கோயில்பிள்ளை
கம்பளை.

### கத்தோலிக்க பேராலயம்

யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை சமீப காலத்தில் மகோன்னத சாதனைகள் பலவற்றை நிலைநாட்டியுள்ளது. சென்ற மாதம் 30-ம் திகதி திறந்து பிரதிட்டை செய்து வைக்கப்பட்ட புனித மரியமமாள் பேராலயம் இதன் கொடுமுடியாக அமைந்தது என்று குறிப்பிடலாம். 1939-ம் ஆண்டு அத்திவாரம் இடப்பட்ட இப் பேராலயம் 43 வருடங்களுக்குப் பின்னர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனுடைய முழு நீளம் 230 அடி என்றும் மிகக் கூடிய உயரம் 115 அடியென்றும் தெரிய வருகிறது. தேவாலய உட்புறத்தின் நில அளவு 34,550 சதுர அடியாகவுள்ளது — பாராட்டப்பட வேண்டிய சாதனையிது. இதுவே இப்போது இலங்கையின் மிகப் பெரிய ஆலயம் என்று கூறப்படுகிறது.

இதனுல் 30-ம் திகதி நடைபெற்ற திறப்பு விழா மகிழ்ச்சிகரமானதாகவும் உணர்ச்சிமிக்கதாகவும் விளங்கியதில் வியப்பில்லை. அன்று மாலை 5-00 மணிக்கு நாட்டின் பல திசைகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், நூற்றுக்கணக்கான கன்னியாஸ்திரிகள், மதகுருமார் குழுமியிருந்தனர்.

மங்களகரமான நாதசுர இசையுடன் பிரதிஷ்டை வழிபாடு ஆரம்பமானது. ஆலயத்திற்குள் மிக அலங்காரமான பவனியொன்று கம்பீரமாக வந்து ரோமாபுரியில் இருந்துவந்த சுவிசேடப் பணியின் ஆணைக்குழுவின் பொதுச் செயலாளர் பேரருள் திரு வே(f)ர்னண்ட வி f ரூங்க், வத்திகானின் ஈழத்துத் தூதுவராய்ப் பணிபுரியும் பேரருள்திரு நிக்கொலா ரொட்டுலோ, கண்டி, மட்டுநகர், திருமலை மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் முறையே போல் பெரேரா, எல். ஆர். அன்ரனி, தொமஸ் சவுந்தரநாயகம் ஆகியோர் முன்வர யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை அவர்கள் பவனிக்குத் தலைமை தாங்கி வந்தார். ஆலயத்தின் முகப்பில் முக்கிய விருந்தினர்களாகிய ஆயர்கள் அனைவருக்கும், மாலைகள் அணிவித்து, ஆரத்தியெடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

பேராலயத்தின் பிரதிஷ்டைக்கு பாப்பாண்டவர் அனுப்பிய ஆசிச் செய்தியை யாழ்ப்பாண ஆயர் ஆங்கிலத்திற் படிக்க அதை மொழிபெயர்த்துப் படித்தார். யாழ். மறைமாவட்ட முதல்வர் அருள்திரு மைக்கல் சாமி சு. ம. தி. அவர்கள்.

இதனைத் தொடர்ந்து பிரதிஷ்டைச் சடங்கு யாழ். ஆயர் தலைமையில் ஏனைய ஆயர்கள் கூடி நிறைக அழகுற நடைபெற்றது.

திருச்சடங்கின் முடிவில் ஆலயத்தைக் கட்டி முடிக்க முழு முயற்சியெடுத்த அருள்திரு. யே. பி. ஈ. செல்வராசா அவர்கள் தமது நன்றியுரையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றி கூறினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய ஆலயக் கட்டிடக் குழுத் தலைவர் டாக்டர் யே. பி. ஸி. பிலிப்ஸ் அவர்களும் யாழ். ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளையவர்களும் வெவ்வேறு காரணங்களிலிருந்து, கட்டிட வேலைக்கு உதவிய வரகன்ஸ் தேவராசா உட்பட அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

## சிந்தனைக் கோவை

ஒருவனுக்கு ஏற்படக் கூடிய மிகப் பெரிய துன்ப அனுபவம் அவனுக்குத் தீங்கு விளையக்கூடும் என்பதல்ல; ஒருபோதும் அவனுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படாது என்பதுமல்ல; அவனே இல்லாமற் போகக் கூடும் என்பதே.

[கனம் மாக்கொம் நைகிறென் — ஒரு பிரசங்கத்தில் — தமிழாக்கம்]

* * *

கடவுள் நமக்காக வகுக்கும் வாழ்க்கை மரணத்தினால் மட்டுப்படுத்தப்படுமொன்றல்ல; அது மரணத்தின் பின்புதான் ஆரம்பிப்பதுமல்ல. ஈஸ்ரர் சம்பவம் மரணத்தை ஒரு முடிவு அல்லது சேருமிடமென்ற நிலையிலிருந்து ஒரு பயணப் பாதையாக்கிவிடுகிறது. நாம் நமக்காக வகுத்துக் கொள்ளும் வாழ்க்கைதான் மரணத்தோடு முடிவடைவது.

[கனம் மாக்கொம் நைகிறென் பிரசங்கம்]

* * *

கர்த்தர் பூமியை உண்டாக்கினார்; சில காலம் அதில் சீவிக்கும்படி வந்தார்; ஆயினும் அதன் நற்பலன்களை, அதன் வளங்களை, அவர் போதியளவு உபயோகிக்கவில்லை; அப்படியிருந்தும் அவர் முறுமுறுக்கவில்லை......... அவர் சம்பூரண வாழ்வை நடத்திய ஒரு ஏழை.

[கத்லீன் பேய்லி கட்டுரை]

# இன்னும் நமக்கு சமயப் பரப்பாளர்கள் தேவையா ?

[அரசரடி இறையியற் கல்லூரியின் சஞ்சிகையான இறையியல் மலர் இதழில் வெளியானது. விடயத்தின் பொருத்தம் கருதித் தாரகையில் வெளியிடுகிறோம். நன்றி — சஞ்சிகைக்கும் எழுத்தாளருக்கும்.]

(முற்றொடர்ச்சி)

இந்தப் பிரச்சனைகளின் அடித்தளமானது பல்வகைப்பட்ட திருச்சபைகளுக்கிடையே காணப்படும் சுயநலமுள்ள பகட்டாக உள்ள பொருளாதார அநீதியாகும். பொருளாதார சமநிலையற்ற உறவுதான் அதிகார மனப்பான்மைக்கு அடித்தளமாக இருந்து இந்த மனப்பான்மையை நெடுநாளாய் நீடிக்கச் செய்கிறது. பொருளாதாரமும் பணிந்து செல்லும் மனப்பான்மைக்கு அடித்தளமாக இருக்கிறது. இது மேற்கத்திய நாடுகள் முறையின்றி வழங்கும் உதவிகளினால் ஏற்பட்டது.

மேலைநாட்டுச் சூழலின் தவறுன உணர்வினால் ஒவ்வொரு திட்டத்திற்கும் பெறப்படும் பணம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ ஒரு குறிப்பிட்ட ஏழை மக்களுக்கு உதவியாக உள்ளது. அனைத்துலகத் திருச்சபைத் தொண்டர்கள் அடிக்கடி இப்பொருளாதார மாற்றீடுகளுக்கு இடையீட்டாளராக உள்ளனர்.

அனைத்துலகத் திருச்சபைத் தொண்டர்கள் உடனுழைப்பாளர்களாகவும், உடன் கூட்டாளிகளாகவும் பணியாற்றி ஒரு நடுநிலையில் செயலாற்றும் வழியில் இத்தகைய எண்ணங்களுக்குத் தடைவிதிக்க வேண்டும். படிநிலை அமைப்புக்களுடைய திருச்சபையின் சூழலில் இத்தகைய எண்ணங்களுக்குத்தான் தடைவிதிக்க வேண்டும், படிநிலை அமைப்புக்களுடைய திருச்சபையின் சூழலில் இத்தகைய பணி எளிதானதல்ல. முதனிலையாளர்களும், கடைநிலையாளர்களுமின்றி மூன்றும் மண்டில நாடுகளிலோ அல்லது மேனாடுகளிலோ இத்தகைய ஒத்துழைப்பிற்கு ஒரு வடிவம் இல்லை. அகத்தியமாகத் தேவைப்படும் இத்தகைய ஒரு புதிய அமைப்பு அனைத்துலக அளவில் செயல்படவும் விரிவாக்கப்படவும் வேண்டும்.

மூன்றுவதாக, கருத்து முரண்பாடுகளாலும் வெளிப்படையாக தாங்கிக்கொள்வதின் மூலமாகவும்தான் ஒரு சுமுகமான உறவினை ஏற்படுத்தலாம். அதிகார மனப்பான்மையினரின் நீண்ட வரலாறு பலவழிகளில் தன்னுட்டுத் தொண்டர்களுக்கும் அனைத்துலகத் திருச்சபைத் தொண்டர்களுக்குமிடையில் உறவைப் படைத்துவிட்டது. தாழ்வுமனப்பான்மை உணர்வுதலின் கலப்பும், தங்கள் சொந்த பாரம்பரியங்கள் பற்றின. மிகைப்படுத்தப்பட்ட பெருமைகளும், திய உணர்வுகளும், ஒருவரையொருவர் தாங்கிக்கொள்ளுகின்ற ஆசை நிலையும் இருதரப்பிலும் குறிப்பிட்ட அளவு இன்னும் உள்ளது. இவைகளின் அடித்தளம் அநீதியுள்ள பொருளாதார நிலைமைகளில் இருக்கக் காண்கிறேம். இந்த நிலைமைகள் சமுதாயங்களின் புதிய அனைத்துலக ஒழுங்குமுறைகள் அரசியல் முறைகளில் திருப்பப்படுவதன் மூலம் தீர்க்கப்படலாம். மேலும், இது ஒரு திடமான ஐக்கியத்தை உருவாக்கவும் இயலும். இப்படிப்பட்ட நல்லுறவு நமக்கிடையே உள்ள கருத்து முரண்பாடுகளை வெளிப்படையாக சந்தித்துத் தீர்த்துக்கொள்ள முன்வரும்போது ஏற்படுவதை இதுவரை நான் கண்டிருக்கிறேன். கருத்துமுரண்பாடுகள் என்பதை நான் நல்லுறவை முறிக்கக்கூடிய ஒன்றுகக் குறிப்பிடாமல் இருதரப்புக்கும் உள்ள நேர்மையான மனப்பான்மை. அச்சமற்ற திறந்த மனப்பான்மையாகக் குறிப்பிடுகிறேன். நட்பு நிலையில் இதனைப் பற்றிய திறந்த கண்ணேட்டமுடைய நடுநிலை மதிப்பீடு இந்த மறுசிந்தனைக்குக் காரணமாக உள்ளது. மறைக்கப்பட்ட நடுநிலை மதிப்பீடு அச்சத்தையும், கசப்புத்தன்மையையும், வலுவற்ற உறவையும் அடிக்கடி உருவாக்கும்.

இது எதைக் குறிக்கிறதெனில் ஊழல்களையும். கைக்கூலி பெறுதல், கொடுத்தல் பற்றியும் அதேபோன்று அனைத்துலகத் திருச்சபைத் தொண்டர்களின் பொருளாதாரத் தனிச் சலுகைகள் பற்றியும் அவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றியும் வெளிப்படையாக விவாதிப்பதை இது குறிக்கிறது.

கருத்து முரண்பாடுகளைப் பற்றிய திறந்த வாழ்வு பாடுபட்ட இறைமைந்தனின் திருச்சபைக்கு மிக அருகில் கொண்டு செல்லும் வாழ்வாகும். அவருக்கு மரணம் வரை போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

முடிவாக, கிறிஸ்துவின் திருச்சபைக்கென்று எதிர்காலம் இருக்கும் வரையில், கிறிஸ்துவின் சீடர்களிடையே ஒற்றுமை இன்றியமையாதது. இந்த நாட்டிணைப்பு, கடவுளின் நீதி வெளிப்படும் புதிய வானத்தையும் புதிய பூமியையும் உருவாக்க உதவும்.

(முற்றும்)

---

## கடவுள் ஆவியாயிருக்கிருர்

— R. K. தியாகராசா —

(முற்றொடர்ச்சி)

கடவுள் தூலப் பொருளைப் படைத்தார். அதை நிலைநிறுத்தி இயக்கி வருகிருர். ஆனால் அவர் அதனுள் வசிப்பதில்லை. அதில் ஒரு பகுதியாய் இருப்பவரும் அல்ல. ஆகையினுற்றுன் சிருஷ்டிக்கப்பட்ட எப்பொருளைப் போலவும் விக்கிரகம் இயற்றி அதைக் கடவுள் என அழைக்கலாகாது என்ற கட்டளை நமக்குக் கொடுக்கப்பட்டது. இயேசுக்கிறிஸ்து தோற்றத்தில் எப்படி இருந்தார் என்பது நமக்குத் தெரியாது. ஓவியர்கள் தமது கற்பனு சக்தியை உபயோகித்துப் படங்களை வரைந்தார்கள. அந்தப் படங்களில் ஒன்றும் உண்மையில் இயேசு எப்படியிருந்தார் என்பதைக் காட்டாது என்பதை நாமறிவோம். நாம் கடவுளைப் பற்றி எண்ணும்பொழுதும், ஜெபம் செய்யும்பொழுதும் நம் மனதில் சில சித்திரங்களை உண்டாக்கிக் கொள்வதுண்டு. ஆனால் இந்தச் சித்திரங்களில் ஒன்றும் சிறிதுகூடக் கடவுளைப் போலிருக்கமுடியாது என்பதையும் நாமறிவோம். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு நன்ருக ஜெபஞ் செய்யக் கற்றுக் கொள்ளுகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு இந்தச் சித்திரங்களின் அவசியம் நமக்கு இராது.

எனக்கு ஒரு உடல் உண்டு. ஆகையினுல் நான் தூலப் பொருளான இவ்வுலகின் ஒரு பகுதியாயிருக்கின்றேன். ஆனுல் நான் கடவுளை அறியக்கூடியவன். எனவே நான் முழுவதுமாய் தூலப்பொருளைச் சேர்ந்தவனுமல்ல. நிலத்திலும் நீரிலும் உயிர் வாழும் தவளை போன்ற பிராணிகள் உண்டு. அதைப்போல மனிதனும் இவ்வுலகத்திற்கும் மறு உலகத்திற்கும் இடையே வாழும் ஒரு பிராணி. மனிதன் விரும்பினுல் சற்று அதிகமான அறிவையுடைய ஒரு விலங்குபோல வாழலாம். மனிதர் பலர் அவ்வாறு வாழவும் செய்கின்றனர். அவர்களின் எல்லாச் சிந்தனைகளிலும் கடவுள் இருப்பதில்லை. இப்படி வாழ்பவர்கள் பெரும்பாலும் சந்தோஷமாக இருப்பதில்லை. நியாயம் என்ன? மனிதனது உள்ளத்தின் ஆழமான பகுதி ஒன்று எப்பொழுதும் அன்பை நாடி நிற்கின்றது. கடவுளின் அன்பு ஒன்றே அவனைச் சந்தோஷமாயும் சமாதானமாயும் வைத்திருக்க வல்லது. மனிதன் கடவுளை நேசிக்க வேண்டும். நேசியாவிட்டால் இந்த இடம் வெறுமையாய் இருக்கும். அந்த இடத்தை அதிக காலம் வெறுமையாய் வைத்திருக்க முடியாது. வெறுப்பு, பயம், சஞ்சலம் நிரப்பிவிடும். கடவுளை விட்டு மனிதனுல வாழ முடியாது. இதற்காக இந்த உலகத்தை விட்டு ஒதுங்கி வாழவும் முடியாது. கடவுளுடைய பிள்ளையாய் இந்த உலகில் வாழ்வதன் மூலமே அவன் சமாதானமடைவான்.

இந்த இரு உலகங்களையும் ஏற்றுக்கொண்டு ஒரே சமயத்தில் இவ்விரு உலகங்களிலும் வாழ்ந்து வர முயல்பவனே கிறிஸ்தவன். ஆகையினுல் அவனது வாழ்க்கையில் எப்பொழுதும் ஓரளவு போராட்டம் இருந்து கொண்டே இருக்கும், "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றது" (கலா. 5;17). நம்மில் ஒரு பகுதி கடவுளது சித்தத்தின்படி வாழ விரும்புகின்றது. அதுவே ஆவி எனக் குறிக்கப்படுகிறது, கடவுள் ஒருவர் இல்லை என்பதுபோல் ஜீவிக்க விரும்பும் தன்மையையே இங்கு மாம்சம் எனக் கூறப்பட்டுள்ளது. மாம்சம் ஆவியை அடக்கியாள ஒருவன் அனுமதித்தானுனுல் அவன் விலங்குகளின் நிலையை அடைவான். ஒருவனில் எப்பொழுதும் எல்லாவிடங்களிலும் ஆவியே ஆளுகை செய்வது சாத்தியமானுல அவன் உண்மையான மனிதன். இவனே கடவுளின் இராஜ்ஜியத்திற்குத் தகுதியுடையவன். ஆயேசுகிறிஸ்துவில், அவரில் மட்டுமே இத்தகைய வாழ்க்கை ஒருபோது வாழப்பட்டது. மாம்சத்தின் மேல் ஆவி வெற்றி பெற நம்முடைய கடவுள் கிரியை செய்து கொண்டேயிருக்கிருர்,

கடவுள் மக்களை அழைக்கின்ருர். தமது அழைப்புக்கு இணங்கும்படி பலவந்தப்படுத்தமாட்டார். மக்கள் கடவுளை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். கடுகு விதை, புளித்த மா உவமைகளிலே சிறிதளவிலிருந்து பெரிதளவாகக் கடவுள் கிரியை செய்யும் முறை விளக்கப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே அழைக்கப்பட்டவர்கள் தெரிந்துகொள்ளப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டிலே இஸ்ரவேலர் மூலம் எல்லா நாடுகளும் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்பதற்காக அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டனர். இப்பொழுது திருச்சபையின் அங்கத்தினராகிய நாம் சுவிசேஷத்தை உலக முழுவதிலும் பரவச் செய்வதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளோம். ஒரு மனிதன் கடவுளை அறியும்வரை, அவன் உண்மையான மனிதனல்ல. கடவுளை அறிந்த மனிதன் தான் கடவுளுக்கு மட்டும் பொறுப்பாளியெனவும், தன்னைச் சுற்றியுள்ளவர்கள் செய்கிறபடியோ, சிந்திக்கிறபடியோ தான் செய்ய வேண்டியதில்லை எனவும் உணர்கிருன். சாதாரணமாக மனிதன் எல்லாப் பொருள்களும் ஒரேமாதிரியாக இருப்பதையே விரும்புகின்ருன். கடவுளின் கிரியையோ மாறுபட்டதாகவே இருக்கின்றது.

கடவுள் ஆவியாக நம்மில் கிரியை செய்கின்ருர். அவர் நேராக நம்மோடு பேசுவதை நாம் கேட்கலாம். நம்முடைய கடவுள் பேசுகின்ற கடவுள். தீர்க்கதரிசிகள் அவர் பேசியதைக் கேட்டார்கள். கடவுள் நம்மோடு பேசுகின்ருர் என்பதைத் தீர்மானிப்பதெப்படி? முதலாவது வேதாகமம். வேதாகமத்தில் சொல்லப்பட்டதிற்கு மாருகவோ புதிதாகவோ அவர் பேசுவதில்லை, இரண்டாவது சபையில் கூறப்படும் போதனைகள். மூன்றுவது நம்மிலும் மூத்தோரான நண்பர்களின் புத்திமதி. நம்முடைய உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்கள் கடவுளிடமிருந்து வருவதாகத் தோன்றும்போது அது உண்மையா இல்லையா என்பதை அறிய மேலே கூறிய மூன்று வழிகளும் நமக்குண்டு.

கடவுள் பேசுவதை நாம் கேட்டால் கடவுள் நம்மை மற்றவர்களுக்கு அன்பான சேவை செய்வதில் ஈடுபடுத்துவார். கடவுள் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் உண்மையான உழைப்பையே நம்பியிருக்கிருர். மனிதர் மூலமாகவே தமது கிரியைகளை கடவுள் நடத்துகின்ருர். கடவுளின் ஆவி மக்களை ஒன்று சேர்த்து ஒருவரோடொருவர் உறவுகொள்ளச் செய்கின்றது. "சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்பட வேண்டும்." எபே. 1:9 என்பதே அவரது நோக்கம், இந்த நோக்கத்தை நாம் சபையின் காணலாம், திருச்சபை ஒன்றே சகல தேசங்களுக்கும் பொதுவான ஒரு சமூகம். எல்லா ஜாதியினரும் எல்லா நிறத்தவரும் இதில் ஒன்று சேரலாம். கிறிஸ்துவுக்குள் நமக்குள்ள உறவு மற்றெல்லாவித நட்பையும்விட ஆழமானது.

இங்கு நாம் எல்லாவற்றையும் பூரணமற்ற நிலையிலே காண்கின்றும். இவற்றை நாம் ஓரளவாவது பெற்றிருப்பது கடவுள் தமது திட்டங்களை எல்லாம் இவ்வுலகத்தில் நிறைவேற்றிய பின்பு, நாம் இவற்றைப் பரிபூரணமாக அடைவோம் என்பதைக் காட்டுகிறது". அவர் இருக்கும் வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதினுல், அவருக்கு; ஒப்பாயிருப்போம்." (1 யோவா. 3:2) "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். ரோமர் 11-26.

---

### அவதூறு

அவதூறு கடல்களையும், மலைகளையும், பாலைவனங்களையும் எளிதில் தாண்டிச் செல்லும்.

— கோல்டன்.

## Proposals for Educational Reform in Sri Lanka: The Role of Church-related Institutions

BY

**K. Nesiah**

*( Continued from our last issue )*

4. So we arrive at the rewarding concept of *the Comprehensive School.* Such a school would be able to reflect in the composition of the school community and the courses provided, the richness and opportunities of the region and thus contribute to the country's unity and development. The base schools should be neighbourhood Common Primary Schools, followed by a Comprehensive Secondary School, attended by all senior pupils in the catchment area. The educational advantage of bringing together pupils following various courses, both the less able and the more able, and a staff of varied interests and specialized qualifications in the same school, with a wide range of curricular and other opportunities, is that it facilitates educational guidance and informed choices by pupils. It is important that there should be enough choices as special attitudes may only then be discovered, or even change, in a rich school environment. Also, mistaken choices can be revised because of the ease of transfer, and the parity of esteem, in courses in the same school. The large enrolment would make it possible to divide classes into intellectually homogeneous 'streams' and 'sets' so as to heighten the pace of learning. The social case as well as the educational one for a comprehensive enrolment, including all social classes and ability groups, in the same campus, argue in favour of the comprehensive principle applying to Unitary and Private Schools as well.

5. *School Clusters,* proposed in the White Paper, are welcome, but for many more reasons than better organization and better utilisation of resources available. The School Cluster (or School Complex, as termed in the Kothari Report) is an extension of the comprehensive principle to a bigger area, say an Electorate or part of an Electorate, helping to integrate the community of that area. That is, while the Cluster system enables gifted pupils in outlying rural areas to share in what the bigger city schools have to offer, at the same time it helps to develop a sense of belonging together in the area covered. Much of the opposition to the proposal has come from ethnic and religious minorities that their schools and children may get second class treatment. Their experience during the past two decades lends support to that fact. Only a radical change of attitude on the part of the leaders of the majority community can inspire confidence. A guidance and counselling service by well trained and fair minded teacher counsellors will also be vital to the success of the cluster scheme. Might we realize that our education could, instead of being a divisive force, become a powerful factor for nation building?

6. In the *alternative routes to Higher Education* indicated in the White Paper, we come to one of its brightest parts. Dropping out of school half-way need no longer be a calamity, when after a period of work-experience and non-formal education, one is motivated to pursue learning, even research, in one's chosen field and the doors of opportunity are open. It is claimed that almost everyman, given maturity and the right kind of opportunity, is capable of a degree of higher education; and "the greater an individual's potentialities the longer the time needed for their fulfilment". It may indeed be a good thing to reserve half the places in the university to those who come by these alternative routes. This may lead to the wiping out of the cram shops that disfigure our educational landscape.

7. The White Paper sets out, hopefully, "to minimize the harmful backlash effect of *examinations* in the learning-teaching process within the school". The last word has yet to be said on the subject. The SLAAS has recommended in a joint memorandum with the science institutes, that "curricula and examinations (at the Collegiate level) should be designed by Boards staffed by professional educationists, University teachers and employers". It is well worth considering whether instead of holding even the Secondary School examination on an all-Island basis it should not be under boards set up at regional level, under the auspices of the various universities so as to further minimize the remote control on the learning-teaching process. We should indeed look forward to the time when examinations may "wither away" (in the words of the UNESCO Commission on the Development of Education, 1971 – 2)!

8. An inquiry, not less urgent, is into the *books, especially History text-books,* in use in schools. If the people of this country have to learn to live together in peace (whatever be the political settlement) the growing children should be freed from the prejudiced misinformation about their fellows in other parts of the country which books (and newspapers) are seeking to give. We would do well to enter into the movement for the mutual revision of history books which started with the call of Anatole France at the end of World War I: "Burn the books which teach hatred, burn them all". Another subject for inquiry — should the State publish books?

9. But, what more than any other factor will save our education is the *quality of teachers* in our schools. We have to think of an all-graduate profession at the secondary level, and trained graduates of distinction to teach Advanced Level classes and to fill directive positions in all schools and in non-formal education centres. It will help if some of these have been drawn from other vocations. Both pre-service training and continued in-service training and Extension Services of various kinds will help to improve standards. And we must envisage a core of teachers in every institution who will be able to communicate moral and social values by just what they are. Children instinctively seek, from among the staff, people on whom they can model their own growth.

**III Spiritual and Moral Values**

Sri Lanka, like India, is a meeting place of the great religions of the world. She has also inherited the great spiritual and moral values of the Indic civilisation. But, though it is a sad thing to say, it is just the truth to say that the report of the Special Committee on Religious Education is a total repudiation of our ancient legacy, just as the recommendation that "in the recruitment of teachers for the various subjects those with advanced qualifications in religion such as Dharmacharya Certificate in Buddhism should be given preference as an additional qualification" infringes the Right to Equality enshrined in article 12 of our Constitution.

Witness to the spirit of the Indic civilisation: I-Tsing tells us that the ancient University of Nalanda was the meeting ground of the different sects and creeds with their 'possible and impossible doctrines'. The Radhakrishnan Commission Report: "The fundamental principles of our Constitution call for spiritual training. There is no state religion ...... to be secular is not be religiously illiterate. It is to be deeply spiritual and not narrowly religious." The Report quotes Gandhiji: "Fundamental principles of ethics should certainly be taught to the children and that should be regarded as adequate religious instruction".

The chapter on Fundamental Rights in the Indian Constitution includes art. 29 (1)

Any section of the citizens residing in the territory of India or any part thereof having a distinct language or culture of its own shall have the right to conserve the same.

(2) No citizen shall be denied admission into any educational institution maintained by the State or receiving aid out of State funds on grounds only of religion, race, caste, language or any of them.

Art 30 (1) All minorities, whether based on religion or language, shall have the right to establish and administer educational institutions of their choice.

(2) The State shall not, in granting aid to educational institutions discriminate against any educational institution on the ground that it is under the management of a minority, whether based on religion or language.

The significance of these provisions as well as the meaning of the Right to Equality in Art. 14 became clear when the Chief Justice of India advised the President to dis-allow the Kerala Education Bill. Said the Chief Justice, that through the ages India had welcomed all to her shores and given special rights to minorities; the Government of Kerala could not take over the schools of the Christians or Muslims. In the State of Bombay Vs Bombay Education Society, the Bombay High Court held that the Anglo-Indian community had the right to conduct its schools using the English medium and admit pupils of other communities and receive proportionately equal grants for all their pupils.

Would that we in Sri Lanka rose to the height of our spiritual inheritance!

*( to be continued )*

## Report of the C. S. I. Delegation's Visit to the Protestant Church of Pfalz, April—May, 1982

*( Continued from our last issue )*

**Evaluation of the Exchange Program**

The group enjoyed the benefit of a well planned program and all the facilities — accommodation, food, transportation, translation, guidance — that were provided and also the hospitality of several hosts and fellowship with several congregation members. The group is grateful for the same.

While the group felt that the schedule was quite heavy, including that in Black Forest the program has proved to be a very profitable one. However, it is felt that sufficient time was not available to examine several issues in depth.

In order to make similar exchange programs in future more effective, the group suggests that the purpose and content of such programs be decided on the basis of consultation between the host and guest institutions.

It may be desirable to chalk out a schedule of a specialised program instead of exposing all the members of the Group to several aspects of the life of the Church and of the economy in general. This may help in probing into the depth of issues which has not been possible in the present Exchange Program.

**Awareness**

The congregation members with whom the Group has contact had the opportunity of knowing about India from the delegates who visited India earlier. However, they showed keen interest in knowing more about the social, economic, political and religious life in the country and also about the activities in our Churches. To a certain extent, the German people are aware of the problems in Germany, both present and the future.

— *L. S. C. C.*

*( to be continued )*

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.* Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 6th August 1982 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.